©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 149] CHENNAI, MONDAY, MAY 24, 2010
Vaikasi 10, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், குருவிக்கரம்பை கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் 3181/2008/அ3.)*

**No. VI(2)/204(a)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் வட்டாரம், குருவிக்கரம்பை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி வீ. தேவகி என்பவர் ஊராட்சி கணக்குகளை கையாள்வதில் விதிமுறைகளை மீறி செயல்பட்டு, அதிகாரங்களை தவறாக பயன்படுத்தி நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் செய்தது தொடர்பாக, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 205–ன்படி, பதவி நீக்கம் செய்ய முடிவு செய்து, 25 மார்ச் 2009 நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழ்** வெளியீடு எண் 11–பாகம் VI– பிரிவு 2, பக்கம் 109–ல் பதவி நீக்க அறிவிக்கை No. VI (2)/149/2009–ல் வெளியிடப்பட்டது.

மேற்காணும் பதவி நீக்க ஆணையினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் W.P. No. 3441-2009–ன்படி (1) மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் (2) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேதுபாவாசத்திரம் ஆகியோர்கள் மீது அன்னாரால் வழக்கு தொடரப்பட்டு 23 மார்ச் 2010 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதில் 19 ஆகஸ்ட் 2009 தேதிய சென்னை உயர்நீதி மன்ற முழுஆயத் தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளின்படி மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்படாததால் பதவி நீக்க ஆணையை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டாவது மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்க தடை ஏதும் இல்லை எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கின் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படியும் 19 ஆகஸ்ட் 2009 தேதிய சென்னை உயர் நீதிமன்ற முழு ஆயத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் அன்னாருக்கு, 20 ஏப்ரல் 2010 தேதியிட்ட மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு 22 ஏப்ரல் 2010 அன்று சார்பு செய்யப்பட்டது. மறு விளக்கம் கோரும் அறிவிப்பிற்கு மறுவிளக்கம் சமர்ப்பிக்க காலக்கெடு 15 நாட்கள் 6 மே 2010 அன்றுடன் முடிவடைந்துவிட்டது. கால அவகாச நீட்டிப்பு வழங்க போதிய முகாந்திரம் இல்லாமையாலும், 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட விதிகளில் இடமில்லாததாலும், அன்னார் 45 நாட்கள் காலக்கெடு கேட்டு விண்ணப்பித்துள்ள மனு நிராகரிக்கப்பட்டது.

குருவிக்கரம்பை ஊராட்சி மன்றத்தலைவர் தனது மறுவிளக்கத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்காததால், அன்னார் மீது ஏற்கெனவே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு சமர்ப்பிக்கத்தக்க மறுவிளக்கம் ஏதும் இல்லை எனக் கருதியும், அன்னார் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், நிதிமுறைகேடுகள் நிரூபணமாவதாலும், திருமதி வீ. தேவகி எனபவரை குருவிக்கரம்பை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 262 (1)–ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்: 1 மார்ச் 2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2010 மே 19.

**எம். எஸ். சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU